## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - 2019

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107 (5) ஆவது உபபிரிவு பிரகாரம் மற்றும் 108 பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களை தவிரந்து பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவவறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்கமையாமை

| உரிய தொடருடன் ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை அரச துறை கணக்கீட்டு தர நியமங்கள் 01 இல் 76(இ) பந்தி பிரகாரம், அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் 12 மாதங்களுக்குள் காசாக்குவதற்கு முடியுமென எதிர்பார்க்கப்படும் சொத்துக்கள் நடமுறை சொத்துக்களாக வகைப்படுத்த வேண்டுமாயினும், மொத்தம் ரூபா. 298,416,940 ஆன குறுகியகால 42 வைப்புகள் மற்றும் மொத்தம் ரூபா. 12,650,598 ஆன 09 சேமிப்புக் கணக்குகள் நடை-முறையல்லாத சொத்துக்க-ளின்கீழ் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமம் 02 இல் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்படி பணம் என்பதற்கு கையிருப்பு மற்றும் தேவை வைப்பு உரியதாகின்றது. இதன்படி பல்கலைக்கழகங்களின் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யும் குறிக்கோளுடன், பணம் முதலீடு செய்துள்ள வங்கியில் வழங்கப்படும் வட்டி விகிதாசாரத்தையும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. குறுகியகால (03 மாதங்கள்) நிலையான வைப்புகளில் வைப்பிலிடப்பட்டாலும் குறித்த வைப்புகளை புதுபித்தலுக்கு அமைவாக மீதிகள் சம்பந்தப்பட்ட நோக்கத்தின் பொருட்டு பயன்படுத்தும் வரை முதலீடாக பேணப்படும். ஆகையால் இந்த மீதிகள் காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பவற்றின் காட்டப்படாது முதலீடாக காட்டப்பட்டுள்ளது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்கமைதல் வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நூலக தரவு முறைமையொன்றின் வருடாந்த புதுப்பித்தல் கட்டணமாக செலுத்தப்பட்ட ரூபா. 3,142,905 தொகை தவறுதலாக நூலக புத்தக கணக்கில் பற்று வைத்தமை காரணமாக அந்த நூலகப் புத்தகங்களின் பெறுமதி அந்த அளவிலும் மற்றும் ஆண்டின் தேய்மானம் ரூபா.70,608 அக அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆண்டில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிறுவனத்தின் தேய்மானக் கொள்கைக்கு ஒழுங்கமை-வாக நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

**1.5.4 கணக்கீட்டு குறைப்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 04 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் பொருட்டு கொள்வனவு செய்த மொத்தம் ரூபா. 2,236,807 பெறுமதியிலான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தவில்லை. | 2020 ஆண்டில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள்பபடும். | ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கு கொள்வனவு செய்கின்ற நிலையான சொத்து-க்கள் எல்லாவற்றையும் மூலதனமயப்படுத்தல் வேண்டும். |

**1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்**

**1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரசாயன ஆய்வுகூட கட்டிடம் மற்றும் புதிய கலைகூடம் என்பன புனரமைக்கும் வேலைகளை ஒப்பந்தக்காரர் கைவிடப்பட்டிருந்தமையால் 2012 ஏப்ரல் 25 ஆந் திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஆயினும், ஒப்பந்தக்காரரிடம் செலுத்தப்பட்டிருந்த ரூபா. 2,268,483 ஆன முற்பணத் தொகையினைக் கொண்டு பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய ரூபா. 1,764,013 தொகை மீளாய்விற்கான ஆண்டில் அறவிடப்படவில்லை. | சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கிடைக்கப்பெற வேண்டிய பணத் தொகையினை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழகத்தில் 42 விரிவுரையாளர்கள் பட்டநிலை பின்படிப்பு பட்டம் பெறுவதற்காக வெளிநாடு சென்று மீள சேவைக்கு சமூகமளிக்காமை காரணமாக உடன்படிக்கை மீறல்மீது 2020 யூன் 30 ஆந் திகதியில் ரூபா. 113,714,235 தொகையிலான உடன்படிக்கை பெறுமதி அறவிட வேண்டியிருந்தது. | 2019 ஆண்டில் ரூபா. 24,964,784.54 அறவிடுவதற்கு நடவடிக்கை மேறகொள்ளப்பட்டுள்ளது. | உரிய கால வரையறைக்கள் எல்லா உடன்படிக்கை மீதிகளையும் அறவிட வேண்டுமெ-ன்பதுடன், உடன்படிக்கைகள் மீறுதல் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு உடன்படிக்கை-களில் நிபந்தனைகளை பலப்படுத்தல் வேண்டும். |
| (இ) 2019 திசெம்பர் 31திகதியில் அறவிடப்பட வேண்டிய இடர் கடன் மீதியில் 2 ஆண்டுகள் தொடக்கம் 3 ஆண்டு காலப் பகுதிக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா.241,980 தொகை மற்றும் 3 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப் பகுதிக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா.1,145,505 தொகை ஆகும். | 2020 ஆண்டில் ரூபா.217,680 ஆன பணத் தொகை அறவிடப்பட்டுள்ளது. இரண்டு பேர் பொருட்டு தொழில் நியாய சபையில் வழக்கு விசாரணையில் உள்ளதுடன், பணத் தொகையை சேமலாபம் அறவிடுகையில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அறவிடப்பட வேண்டிய பணத் தொகை அறவிடுவதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய பணத் தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 92 ஒப்பந்த வேலைகளுக்கு ஏற்புடையதாக 2013 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் மொத்தம் ரூபா. 116,737,289 ஆன பிடிபணம் சீராக்குவதற்கு அல்லது வருமானத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இங்கு உள்ள சில ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றை முடிவுறுத்திய பின்னர் பிடிபணம் விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எஞ்சியவற்றை வருமானத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| XXIV அத்தியாயத்தின் 3.18 பிரிவு பிரகாரம் | கடன் தொகை அறவிடுவதற்கு அல்லது அறவிடுவதற்கு திருப்திகரமான வேலை திட்டம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது மொத்த பெறுமதி ரூபா. 366,648 ஆன இடர் கடன் பெற்றுக் கொண்டிருந்த 03 அலுவலர்களுக்கு சம்பளமற்ற லீவு வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பேர்களில் ஒருவரின் கடன் தொகை 2019 யூன் மாதம் தொடக்கம் அறவிடப்படுவதுடன், எஞ்சிய இரண்டு பேர் பல்கலைக்கழக சேவையிலிருந்து விலகியுள்ளார்கள். அவர்களின் பணத் தொகை சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | | |
| (i) நிதி ஒழுங்குவிதி 371 (2), (5) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) கட்டுநிதி முற்பணம் பெற்றுக்கொண்ட அலுவலரொருவர் உரிய பணி முடிவடைந்தவுடன் அல்லது 10 நாட்களுக்குள் அந்த முற்பணம் தீர்க்கப்படுதல் வேண்டுமாயினும், மொத்தம் ரூபா. 4,232,885 ஆன 84 முற்பணங்களை மீள தீர்ப்பதற்கு | நிலவிய ஊழியர் பணிபகிஷ்கரிப்பு காரணமாக முற்பணம் தீர்க்கப்படுதல் தாமதமாகியுள்ளதுடன், அவற்றை தற்போது தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சில முற்பணங்கள் | நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றுநிருபங்கள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 21 நாட்கள் தொடக்கம் 164 இடையிலான காலப் பகுதி தாமதமடைந்திருந்தன. | உரிய அலுவல் முடிவடைந்த பின்னர் உரிய காலப் பகுதிக்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| | (ii) நிமித்த கட்டுநிதி ரூபா. 100,000 வரையிலான ஆகக்கூடிய உச்சவெல்லை வரை வழங்க முடியுமாயினும், அந்த எல்லைகளை விஞ்சி 07 அலுவலர்களுக்கு 15 சந்தர்ப்பங்களில் ரூபா. 102,240 தொடக்கம் ரூபா. 277,800 வரையிலான எல்லைக்குள் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | துணைவேந்தர் அவர்களின் அனுமதிமீது முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றுநிருபங்கள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) நிதி ஒழுங்குவிதி 396 | 2014 சனவரி 23 திகதி தொடக்கம் 2019 மே 29 ஆந் திகதி வரையிலான காலப் பகுதிக்கு ஏற்புடையதாக மொத்த பெறுமதி ரூபா. 1,303,000 ஆன இரத்துச் செய்யப்பட்ட 161 காசோலை தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நிதிக் குழுவின் பரிந்துரைகள்மீது வருமானத்தில் எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | நிதி ஒழுங்குவிதிகளுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |
| (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி தாபன விதிக் கோவை<br>---------------------<br>XX ஆவது அத்தியாயத்தில் 3.1 பிரிவு மற்றும் 10 ஆவது அத்தியாயத்தில் 1.6.1 பிரிவு | கல்விசார் ஊழியர்களின் வருகை வெளியேறல் மற்றும் லீவுகள் தொடர்பான ஆவணங்களை பராமரிக்கவில்லை என்பதுடன், வருகை வெளியேறல் என்பன உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறைமை தயாரிக்க வேண்டுமென பொது தொழில்முயற்சி தொடர்பான செயற்குழுவால் ஆலோசனைகள் வழங்கியிருப்பினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இது தொடர்பாக தீர்மானம் மேற்கொண்டு செயற்பட வேண்டிய முறை பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆலோசனை வழங்குதல் வேண்டும். | பொது தொழில்முயற்சி செயற்குழுவின் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ)2015 மே 25 திகதிய 1/2015 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2015 செப்தெம்பர் 18 ஆந் திகதிய | சுற்றுநிருபம் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லைகளை விஞ்சி பல்கலைக்கழகத்தின் 06 பீடாதிபதிகள் பொருட்டு ரூபா. 856,569 பெறுமதியான மேலதிக எரிபொருள் லீற்றர் 6,797 ஐ மீளாய்விற்கான ஆண்டில வழங்கப்பட்டிருந்தது. | சுற்றுநிருபம் பிரகாரம் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் மேலதிக எரிபொருள் வழங்குதலை அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் | சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 13/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | | பல்கலைக்கழகத்திற்கான வாகனங்கள் மிக பழைமையானவை என்பதால் அவற்றை அகற்றப்பட்டு புதிதாக வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கு கோரியிருப்பினும், அனுமதி வழங்கப்படவில்லை. | |
| (உ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவை<br>--------------------------- | | | |
| (i) அரச பெறுகை கைந்நூலின் 2.8.4 பிரகாரம் | ஒப்பந்த பெறுமதி ரூபா.மில்லியன் 100 வரையிலான ஒப்பந்தங்களுக்கு ஏற்புடையதாக திணைக்கள பெறுகை குழுவிற்கான தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவில் ஆகக் குறைந்தது ஒரு உறுப்பினர் நிரல் வரிசை அமைச்சு அல்லது பெறுகை அமைப்பிற்கு புறம்பாக சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பான அறிவினைக் கொண்-டுள்ள ஒருவர் இருத்தல் வேண்டுமாயினும், ரூபா. மில்லியன் 41.5 ஆன பல்கலைக்கழகத்தின் நிருவாக கட்டிடத்தை விஸ்தாரணம் செய்கின்ற ஒப்பந்தம் பொருட்டான தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவில் மூன்று உறுப்பினர்களும் பல்கலைக்கழக அலுவலர்கள் என்பது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்த பெறுமதி பிரகாரம் உரியவாறு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii)பெறுகை வழிகாட்டல் கோவையில் 8.13.3 மற்றும் 8.13.4 | நிச்சயமற்ற ஒதுக்கீடுகள், மதிப்பிடப்பட்ட ஒப்பந்த தொகையில் 10% விஞ்சும்போது ஒப்பந்தத்தின் ஏற்றத்தாழ்வுகளுக்கு அனுமதி பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகார மட்டத்திடம் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், நிருவாக கட்டிடம் விஸ்தாரணம் செய்யும் ஒப்பந்தத்தில் 25% விஞ்சிய ரூபா. 10,557,915 ஆன ஏற்றத் தாழ்வுக்கு முறையான அனுமதி பெற்றுக் கொள்ளவில்லை. | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் மேற்கொள்கின்ற தீர்மானங்களின்படி ஒப்பந்தத்தின் மொத்த பெறுமதி விஞ்ஞாதவாறு மேற்கொண்ட வேலைகள் மற்றும் ஏற்றத்தாழ்வு உருப்படிகளுக்கு கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மானுடவியல் பீடத்தின் எழுதுனர் ஒருவரால் கணினி தகவல்களை வேறுபடுத்தியதமூலம் ரூபா. 3,763,349 ஆன வெளியக விரிவுரை-யாளர்களுக்கான கொடுப்பனவுகளை மோசடி செய்திருந்ததுடன், அது தொடர்பாக எந்தவொரு சட்டத்துடனான நடவடிக்கையும் பின்பற்றாமல் அதில் ரூபா.3,355,624 ஐ 3 தவணைகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்-ளப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா. 407,725 ஆன பணத் தொகை மற்றும் அதற்கான நிதிசார் செலவு இதுவரை அறவிடப்பட-வில்லை என்பதுடன், வெளியக விரிவுரையாளர்களின் கொடுப்பனவுக-ளுக்கு உரிய அதிகாரம் வழங்குதல், பரிந்துரை மற்றும் அனுமதி தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய தரப்புகளுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | முறையான புலனாய்வு பரிந்துரை-கள்படி எஞ்சியதை பல்கலைக்க-ழகத்தின் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு அவரது இணக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவரிட-மிருந்து கிடைக்கப்பெற வேண்டிய தொகையை மீதியாக நிதிசார் தரநிய-மம் பிரகாரம் நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. பணத்தால் ரூபா.3,355,624ஐ எழுதுநர் பல்கலை-க்கழகத்திடம் செலுத்தியுள்ளார். | மோசடி அல்லது பிழைகளை தவிர்ப்பதற்கு அவ்வாறான செயற்பாடுகளை வெளிப்ப-டுத்திக் கொள்வதற்கு, போதியளவு மற்றும் பொருத்-தமான புதிய கணக்கீட்டு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்தலும் இற்றைப்படுத்தி பேணுதலும் மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள்படி, மீளாய்விற்கான ஆண்டில் நிதிசார் விளைபயன் ரூபா. 871,320,870 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 159,969,855 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 711,351,015 ஆன வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு ஊழியர்களின் ஊதியங்கள் மற்றும் பணிக்கொடை செலவினம் அதிகரித்தல் பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| புதிய கருத்துகள், கண்டுபிடிப்புகள் மற்றும் தொழிநுட்ப முன்னேற்றமும், புதிய வேலைவாய்ப்பு சந்தையும் பொருட்டு பல்கலைக்கழகத்தால் புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்த வேண்டுமாயினும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் கடந்த 10 ஆண்டு காலப்பகுதிக்குள் 2011/2012 மற்றும் 2015/2016 கற்கை ஆண்டுகளில் மட்டும் | பல்கலைக்கழகத்தில் உள்ள வளங்கள் மற்றும் வருடாந்த ஒதுக்கீடுகளின் பிரகாரம் புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் நிதி ஒதுக்கீடுகள் அதிகரிப்ப-தற்கு இணையாக புதிய வேலைவாய்ப்பு சந்தை-யை இலக்காகக் கொ-ண்டு புதிய கற்கை நெறிகளை அறிமுகப்ப-டுத்துவதற்கு நடவடிக்-கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

ஒழுங்குமுறையில் புதிய கற்கைநெறி ஒன்றும் நான்கும் மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 நிதியங்களின் குறைப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 101 அன்பளிப்பு மற்றும் புலமைப்பரிசில் நிதியங்களின்கீழ் இருந்த ரூபா மில்லியன் 32 இல், உரிய நோக்கங்களின் பொருட்டு ரூபா. 5 மில்லியன் அதாவது 15.6% போன்ற குறைந்த சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதில் 30 நிதியங்களின்கீழ் ரூபா. 20,385,955 தொகை உரிய நோக்கத்தின் பொருட்டு பயன்படுத்தாது பயனற்று காணப்பட்டது. அதேபோன்று மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா. 40,074,900 ஆன 36 ஆராய்ச்சி நிதியக் கணக்குகள் 04 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் பயன்படுத்தவில்லை என்பதுடன், மொத்தம் ரூபா. 4,699,502 ஆன 08 ஆராய்ச்சி நிதியக் கணக்குகள் மற்றும் மொத்தம் ரூபா. 73,067,553 ஆன 15 விசேட நிதியங்கள் மீளாய்விற்கான ஆண்டில் பயன்படுத்தப்படவில்லை. | புலமைப் பரிசில் மற்-றும் அன்பளிப்பு நிதி-யம், விசேட நோக்கம் அல்லது குறிக்கோள் பொருட்டு ஆரம்பிக்கப்-பட்டுள்ளது. உரிய நோக்கம் மற்றும் அளவுகோல்கள் என்ப-வற்றை அடைந்துக்-கொள்வதற்கு முடியுமாயின் மட்டும் பயன்படுத்தப்படும். | நிதயிங்களை உரிய நோக்கங்களின் பொருட்டு பயன்படுத்தல் வேண்டும். |

### 3.3 கருத்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1994 யூன் 29 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் மருத்துவ பீடத்திற்காக மெத் செவன காணியில் 05 ஏக்கர் அளவிலான நிலப் பரப்பளவை கையேற்கும் பொருட்டு 1998 ஆண்டு தொடக்கம் 2010 ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் ரூபா.மில்லியன் 24 ம், மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.மில்லியன் 50 ம் என்ற வகையில் ரூபா.மில்லியன் 74 ஐ மேல்மாகாண சபையிடம் செலுத்தப்பட்டிருப்பினும், உரிய காணியை கையேற்கும் நடவடிக்கைகள் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்படவில்லை. | இதுவரை கையேற்கப்பட்ட காணித் துண்டுகளுக்கு மட்டும் பணம் செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய காணிப் பகுதிகளை பெற்றுக்கொள்வதற்கு தொடர்ச்-சியாக கூட்டங்களை நடாத்த-ப்படுவதுடன், விரைவாக பல்கலைக்கழகத்திடம் பெற்றுக்-கொள்ளுதல் பல்கலைக்கழ-கத்தின் அபிலாஷையும் ஆகும். | சுவீகரிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவினை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச மட்டத்தில் கருத்தரங்கு மண்டபம், உடற் பயிற்சி மண்டபம், மற்றும் நீச்சல் தடாகத்துடன் கூடிய விளையாட்டு தொகுதியினை நிருமாணிப்ப-தற்காக ரூபா.மில்லியன் 618 ஆன மதிப்பீட்டுடனான கருத்திட்டம் நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி 2014 பெப்ருவரி 13 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்த கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக கேட்போர்கூடம் பொருட்டு ஆலோசனை கட்டணங்கள் மற்றும் திட்டங்களை தயாரிப்பதற்கு 2016 யூன் 22 ஆந் திகதி ரூபா. 5,794,676 ஆன தொகை செலவிடப்பட்டிருப்பினும், அடிப்படை பெறுகை நடவடிக்கைகளை முடிவுறுத்தப்பட்டு ஒப்பந்தங்களை அளித்தல் அறிக்கை திகதி வரை மேற்கொள்ளப்படவில்லை. | இந்த விடயம் தாமதமடைதலுக்கு காரணம் யாதெனில், நிலம் பிரச்சினை அல்ல, நிதி ஒதுக்கீடுகள் சம்பந்தப்பட்ட அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெறாமையாகும். | உரிய பணிகளை தாமதமின்றி நிறைவேற்றிக் கொள்வறத்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் நிருவாக கட்டிடத்தை விஸ்தாரணம் செய்வதற்காக 2016 மார்ச் மாதத்தில் அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் ரூபா.மில்லியன் 49.14 ஆன வெட் வரியற்ற செலவு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 10 மாதங்களுக்குள் மொத்த நிருமாணிப்பு பணிகளையும் முடிவுறுத்த வேண்டியிருந்தது. ஆரம்ப செலவு மதிப்பீட்டின் சில உருப்படிகளை நீக்கப்பட்டு வெவ்வேறாக மதிப்பிடல் காரணமாக மதிப்பீடு ரூபா. மில்லியன் 150.4 வரை அதிகரித்திருந்தது. அதன்படி கருத்திட்டம் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப செலவு மதிப்பீடு ரூபா. 91,619,877 ஆல் அதாவது 186% ஐ விஞ்சியிருந்ததுடன், இந்த கருத்திட்டம் 2020 யூன் மாதம் 30 ஆந் திகதியிலும் முடிவுறுத்தப்படவில்லை. | அந்தந்த ஆண்டு-களுக்கு பல்கலை-க்கழகத்திற்கு கிடை-க்கப்பெறும் ஒதுக்கீடு-களின்படி ஒப்பந்தம் பகுதிகளாக பிரிக்க-ப்பட்டு ஒப்பந்தம் அளிப்பதற்கு நடவடி-க்கை மேற்கொள்-ளப்படும். | பெறுகை வழிகாட்டலுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டு இறதியில் பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பணியாற்தொகுதி 1236 , கல்விசாரா பணியாற்-தொகுதி 1173, கல்வி உதவியாளர் மற்றும் நிருவாக பணியாற்தொகுதி 142 ஆனதுடன், உண்மையான பணியாற்தொகுதி ஒழுங்குமுறையில் 959 , 1045 மற்றும் 142 ஆகும். அதன்படி கல்விசார் பணியாற்தொகுதியில் 277 பதவிகளும், கல்விசாரா பணியாற்தொகுதியில் 128 பதவிகளும், கல்வி உதவியாளர் பணியாற்-தொகுதியில் 37 பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. | பொறியியல் மற்றும் தொழிநுட்ப பீடங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பீடங்களாவதால் அவற்றின் பதவிக-ளின் பொருட்டு ஆட்சேர்ப்பு மேற்-கொள்ளப்படுகின்றது. சில விசேட பாடங்களின் பொருட்டு தகைமை-களைக் கொண்டுள்ள ஆசிரியர்க-ளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்-கப்பெறாமை காரணமாக ஆட்சேர்ப்-புகள் தாமதமடைந்துள்ளன. நிருவாக அலுவலர்களை நியமனம் செய்தல் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்-வதில்லை என்பதுடன், பல்கலைக்-கழக மானியங்கள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படுகிறது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நள்ளாளுகை

### 4.1 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயற்றிட்டம் மற்றும் அதற்கான முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை | கணக்காய்விற்கு தேவையான தகவல் வழங்கப்படுதல வேண்டும். |

### 4.2 நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் தமது விடயவெல்லைக்குள் வருகின்ற அலுவல்கள் தொடர்பில் எவ்வாறு செயற்படல் வேண்டுமென்பது தொடர்பாக போதியளவு புரிதலுடன் செயற்படவில்லை. அதன்படி ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் நிறுவனத்தின் பணிகளுடன் தொடர்புடைய நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறித்த இலக்குகளை அடையும் மைற்கற்கள், சாதனைகள் அடைவதை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் நிறுவனத்தால் அடையாளம் காணப்படவில்லை. | பல்கலைக்கழகத்தில் திட்டங்-களை தயாரிக்கும்போது இது தொடர்பாக கவனம் செலுத்-தப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஐந்தாண்டு திட்டத்திற்கு ஏற்புடையதாக குறிகாட்டி-களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேறகொள்ளப்படும். | நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 இலக்கு-களுக்கு ஏற்புடையதாக நிறுவனத்தின் இலக்கு-களை அடையாளம் காணப்பட்டு அவற்றை அடைந்து கொள்வறத்கு நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |